மாண்புமிகு பேரவைத் தலைவர்: போராட்டம் நடத்தினால் பரவாயில்லை. அவரே ஆக்கிரமிக்காமல் இருந்தால் நல்லது. (சிரிப்பு). திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்தில் நீலாம்பூரிலிருந்து மரப்பாலம் வரை புதியதாக ஒரு புறநகர் வழிச் சாலை அமைப்பதற்கு அரசு உத்தேசித்திருந்து, இந்த ஆண்டு பணி துவங்க உள்ளது. அந்தச் சாலையையாவது நான்கு வழிச் சாலையாக அமைத்துக் கொடுக்க முன்வருவீர்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரிடத்திலே கேட்க வேண்டிய கேள்வி இது. பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் சொன்னார்கள். உங்களுடைய உணர்வுகளை அவர் பரிசீலிப்பதாக அவர் முகத்திலிருந்தே தெரிகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 46, டாக்டர் பீட்ரிக்ஸ் டி' சோசா, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்.

46—

CONVERSION OF OPEN FIELDS INTO PARKS

***36756–Dr. Beatrix D' Souza:**

Will the Hon. the Minister for Transport and Forests be pleased to State-

Whether the Government will consider converting the open fields in the Government Estate into parks?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசின் திறந்த வெளி நிலங்களைப் பூங்காவாக மாற்றுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Dr. BEATRIX D' SOUZA: Hon. Speaker Sir, I understand that the Government stated that the former Governor's House, which now temporarily houses the Police Headquarters, is going to be renovated and then treated as a heritage building under the Heritage Act. The open spaces in front of this building were at one time very well maintained. I would suggest that we have a garden, or a green park, or a rose garden there. If this particular subject does not come under the purview of the Transport Department, I would request that the Hon. Minister for Transport may kindly recommend my proposal to the Hon. Minister for Public Works Department.

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டதைப்போல அரசு திறந்தவெளி நிலங்கள் என்று சொல்வது, பொதுப்பணித் துறை நிர்வாகத்திலே இருக்கிற காரணத்தினாலே சிறு சிறு பூங்காக்களை பொதுப் பணித் துறையே நிர்வகிக்க இருக்கின்றது. பல்வேறு இடங்களில் அதைப் பராமரித்து வருகிறது. ஆகவே பொதுப் பணித்துறை அமைச்சரவர்கள் அதை ஆய்வுசெய்து நடவடிக்கை மேற்கொள்வார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 47, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு உணவு அமைச்சர்.

47—

உரிமம் இன்றி நெல் கொள்முதல் செய்வோர்மீது நடவடிக்கை

84144-திருமதி கே. மரியம் உல் ஆசியா:

மாண்புமிகு உணவு அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா--

அரசு உரிமம் இன்றி நெல் கொள்முதல் செய்யும் தனியார் விவசாயிகள் மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், உணவு அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உரிமம் இன்றி நெல்/அரிசி வியாபாரம் செய்வது சட்டத்திற்குப் புறம்பானது. எந்த நபர் அதில் ஈடுபட்டாலும் சட்டப்படி நடவடிக்கை